# தேர்தல் ஆணையம் ஏற்படுத்தும் குழப்பம்!

## அனைத்துக் கட்சி கூட்டத் தீர்மானம்... முதல் பக்கத் தொடர்ச்சி

வாக்காளர் பட்டியல் தயாரிப்புப் பணி என்பது நியாயமான மற்றும் நேர்மையான தேர்தலுக்கு மிக முக்கியம்; நாடாளுமன்ற ஜனநாயகத்தின் உயிர்மூச்சாகக் கருதப்படுகிறது. அரசியல் சட்டமும் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டமும் தேர்தல் ஆணையத்திற்கு இதற்காகவே அதிகாரத்தை வழங்கி இருக்கிறது.

**மக்களின் வாக்குரிமைக்கு எதிரான செயலாகும்!**

நடுநிலைமையுடன், பாரபட்சமின்றி எந்த அரசியல் கட்சிக்கும் துணை போகாமல் சுதந்திரமான அமைப்பாகத் தேர்தல் ஆணையம் செயல்பட வேண்டும். தேர்தலில் அனைத்துக் கட்சிகளுக்கும் சம களத்தை (Level Playing Field) ஏற்படுத்திக் கொடுக்கும் மிக முக்கியமான கடமையைத் தேர்தல் ஆணையத்திடம் அரசியல் சட்டம் ஒப்படைத்துள்ளது.

ஆனால் பொறுப்புள்ள கடமையை நிறைவேற்ற வேண்டிய தேர்தல் ஆணையமே ஒன்றியத்தில் ஆட்சியிலிருக்கும் ஒரு கட்சியின் சார்பாக நின்று செயல்படுவதாகக் குற்றம் சாட்டுகிறோம்.

உச்சநீதிமன்றத்தில் உள்ள S.I.R. வழக்கில் இறுதித் தீர்ப்பு வராத நிலையில், தனது 27102025 அறிவிப்பின்படி, தமிழ்நாட்டில் நடத்துவதாக அறிவித்துள்ள சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (S.I.R.) முழுக்க முழுக்க ஜனநாயக விரோதமான, தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமைக்கு எதிரான செயலாகும்.

**S.I.R சீராய்வை கைவிடுக!**

எனவே இந்த S.I.R. ஏற்றுக் கொள்ளக்கூடியது அல்ல. ஆகவே இந்த S.I.R சீராய்வை தேர்தல் ஆணையம் இப்போது கைவிடும்படி அனைத்துக் கட்சிகளின் இக்கூட்டம் தேர்தல் ஆணையத்துக்கு வேண்டுகோள் வைக்கிறது.

தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பில் உள்ள குறைகள் களையப்பட்டு, உச்சநீதிமன்றத்தின் வழிகாட்டுதலை வெளிப்படையாகக் கடைப்பிடித்து, உரிய அவகாசம் தந்து, 2026 தேர்தலுக்குப் பின்பு, எக்கட்சிக்கும் சார்பற்ற நிலையில் தேர்தல் ஆணையம் S.I.Rஐ நடத்த வேண்டும்.

தேர்தல் ஆணையம் இந்தக் கருத்துகளை ஏற்காததால், தமிழ்நாட்டு வாக்காளர்கள் அனைவரின் வாக்குரிமையையும் நிலைநாட்ட உச்சநீதிமன்றத்தை நாடுவதைத் தவிர வேறு வழியில்லை. தேர்தல் ஜனநாயகத்தைக் காப்பாற்றிட தமிழ்நாட்டில் உள்ள அரசியல் கட்சிகள் உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்வது எனவும் இந்த அனைத்துக் கட்சிக் கூட்டம் தீர்மானிக்கிறது.

இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



அரியலூர் மாவட்டம், அரியலூர் நகராட்சியில் கட்டப்பட்டு வரும் பேருந்து நிலைய கட்டுமானப் பணிகளை அமைச்சர்கள் கே.என்.நேரு, சா.சி.சிவசங்கர் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் மற்றும் பலர் உள்ளனர்.

# ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதி - கீரனூரில் புதிய ரேஷன் கடை!

## அமைச்சர் அர.சக்கரபாணி திறந்து வைத்தார்!

ஒட்டன்சத்திரம், நவ.3-

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கீரனூர் பேரூராட்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ரேஷன் கடை மற்றும் உயர்மின் கோபுர மின் விளக்கினை பொது மக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்து

உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி பேசியதாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சிப்பொறுப்பேற்ற பின்பு கிராமங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்கில், சாலை வசதிகள், பாதாள சாக்கடை வசதிகள், தெரு விளக்கு, குடிநீர் வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகளை வழங்கி வருகிறார்கள். அதனடிப்படையில் தினம் கீரனூரில் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து தலா ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ரேஷன் கடை மற்றும் உயர்மின் கோபுர மின் விளக்கினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மேலும், கீரனூர் ஊராட்சியில் நேரடி கொள்முதல் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சிப்பொறுப்பேற்ற பின்பு 12 கோடியில் பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகள் நடைபெற்றுள்ளன. 432 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன என பேசினார்.

இந்நிகழ்ச்சியில், நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சச்சிதானந்தம், ஒன்றிய செயலாளர் பொன்ராஜ், வட்டாட்சியர் பிரசன்னா, செயல் அலுவலர் ரோஹினி, பேரூர் செயலாளர் அன்பு (எ) காதர் பாட்சா, பேரூராட்சித் தலைவர் கருப்புசாமி, துணைத்தலைவர் ஹாஜி அப்துல்சுக்கூர் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. பங்கேற்பு! பெரம்பலூர் - குன்னம் சட்டமன்றத் தொகுதியில்

# ‘என் வாக்குச்சாவடி - வெற்றி வாக்குச்சாவடி’ ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் சிறப்புரை! வீ.ஜெகதீசன் தலைமை!

பெரம்பலூர், நவ. 3 –

பெரம்பலூர் மாவட்ட தி.மு.க. சார்பில், பெரம்பலூர்,குன்னம் சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட பாக நிலை முகவர்கள்(BLA2) பாக நிலை டிஜிட்டல் முகவர்கள், BDA மற்றும் IT WING பூத் ஆலோசனைக் கூட்டம், ஜே.கே.திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

”என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி எனும் கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் முழக்கத்தின்படி, 2026 சட்டமன்ற தேர்தலில் ”வெல்வோம் 200, படைப்போம் வரலாறு எனும் வெற்றிப்பயணத்தை தொடரும் வகையில், நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சரும் மண்டல பொறுப்பாளருமான கே.என்.நேரு மற்றும் கழகத் துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி. ஆகியோர் வழிகாட்டுதல்படி, போக்குவரத்துத்துறை மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆலோசனைக்கினங்க, பெரம்பலூர் மாவட்ட தி.மு.க.சார்பில், பெரம்பலூர், குன்னம் ஆகிய இரண்டு சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட பாக நிலை முகவர்கள் (BLA2) பாக நிலை டிஜிட்டல் முகவர்கள் (BDA) மற்றும் IT WING பூத் கமிட்டி ஆலோசனைக் கூட்டம், ஜே.கே. மஹால் திருமண மண்டபத்தில், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தலைமையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில், போக்குவரத்துத்துறை மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார்.

இது வெறும் தேர்தலுக்கான பணி அல்ல, ஒட்டு மொத்த இந்தியாவை ஒரு நாடாக வைத்திருக்க வேண்டிய பொறுப்பு நமது முதல்வரிடம்தான் வந்துள்ளது. அதனால் மீண்டும் மு.க.ஸ்டாலின் அவர்களை முதலமைச்சர் ஆக்க வேண்டும் என்று பேசினார்.

இதில் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், தொகுதி பார்வையாளர்கள் தங்க.சித்தார்த்தன், ஏ.கே.அருண், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, மாநில வர்த்தக அணி துணை அமைப்பாளர் குன்னம் சி.ராஜேந்திரன், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மு.அட்சயகோபால், வழக்கறிஞர் என்.ராஜேந்திரன்,பொதுக்குழு உறுப்பினர்கள் கி.முகுந்தன், பட்டுச்செல்வி ராஜேந்திரன், செ.அண்ணாதுரை, ஆர்.முருகேசன், ராமச்சந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், நூருல்ஹிதா இஸ்மாயில், சன்.சம்பத், மாவட்டப் பொருளாளர் செ.ரவிச்சந்திரன்,

ஒன்றிய கழக செயலாளர்கள் என்.கிருஷ்ணமூர்த்நி, எம்.ராஜ்குமார், செ.நல்லதம்பி, தி.மதியழகன், சி.ராஜேந்திரன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் டாக்டர் செ.வல்லபன், ந.ஜெகதீஷ்வரன், அழகு.நீலமேகம், பேரூர் கழகச் செயலாளர்கள் எம்.வெங்கடேசன், ஆர்.ரவிச்சந்திரன், செல்வலெட்சுமி சேகர்,ஏ.எஸ்.ஜாகிர்உசேன், எம்.சுந்தர்ராஜ், க.ரமேஷ், மாவட்ட பிரதிநிதி எஸ்.அழகுவேல், தகவல் தொழில் நுட்ப அணி மாவட்ட அமைப்பாளர் ரமேஷ் ராஜேந்திரன், வேப்பூர் கிழக்கு ஒன்றிய இளை ஞரணி அமைப்பாளர் ரா.சிவா, கிளைக் கழக செயலாளர்கள், பாக நிலை முகவர்கள் (BLA2) பாக நிலை டிஜிட்டல் முகவர்கள் (BDA) மற்றும் IT WING பூத் ஒருங்கிணைப்பாளர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்

# நெல் போக்குவரத்து, ஒப்பந்த விதிகளின்படி முறையாகச் செய்யப்பட்டுள்ளது!

## அமைச்சர் அர.சக்கரபாணி விளக்க அறிக்கை!

**சென்னை, நவ.3**

**தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நெல் போக்குவரத்து, ஒப்பந்த விதிகளின்படி முறையாகச் செய்யப்பட்டுள்ளது என உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அறிக்கை விடுத்துள்ளார்.**

அவரது அறிக்கை வருமாறு :-

ஆங்கில நாளேடு ஒன்றில் நேற்றும் இன்றும் (31.10.2025 & 1.11.2025) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நெல் போக்குவரத்து தொடர்பாக செய்தி வெளியிடப்பட்டுள்ளது. இது தொடர்பான விவரங்களைக் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கிறேன்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் போக்குவரத்து ஒப்பந்தம் 5 ஆண்டுகளுக்கு (2019-24) அ.தி.மு.க. ஆட்சியில் இறுதி செய்யப்பட்டு, கழக ஆட்சி பொறுப்பேற்ற போது நடைமுறையில் இருந்தது.

அந்த ஒப்பந்தப்படி போக்குவரத்துக் கட்டணம் மிகவும் அதிகமாக இருந்ததோடு ஒன்றிய அரசின் உணவு மற்றும் பொது விநியோகத் திட்டத் துறையினால் 6.5.2019 அன்று வெளியிட்ட நிபந்தனைகள் மற்றும் வழிகாட்டுதலின்படி இல்லை. ஒன்றிய அரசு வழிமுறைகளின்படி இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை மண்டல வாரியாகப் போக்குவரத்து ஒப்பந்தம் போடப்பட வேண்டும் என்பதற்குப் பதிலாக ஐந்தாண்டுகளுக்கு மாநில அளவில் ஒப்பந்தம் போடப்பட்டதால் போக்குவரத்துக்காக தரவேண்டிய தொகையை ஒன்றிய அரசு விடுவிக்காமலிருந்தது.

கழக ஆட்சி பொறுப்பேற்ற போது இருந்த இந்நிலையை மாற்றி, அ.தி.மு.க. ஆட்சியில் ஒன்றிய அரசின் வழிகாட்டு முறைகளுக்கு மாறாகவும் விலை அதிகமாகவும் இருந்த ஒப்பந்தப்புள்ளியை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. பல்வேறு சட்டப் போராட்டங்களுக்குப் பின் அந்தப் போக்குவரத்து ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டது.

பின்பு, 39 மண்டலங்களுக்கும் (38 மாவட்டங்கள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக வசதிக்காக 39 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன) தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000 படி மாநில அளவிலும் இந்திய அளவிலும் செய்தித் தாள்களில் விளம்பரம் செய்து மண்டல வாரியாக தனித்தனியாக ஒப்பந்தப்புள்ளிகள் 9.6.2023 அன்று கோரப்பட்டன.

15.7.2023 அன்று ஒப்பந்தப் புள்ளி சமர்ப்பிப்பதற்கு முன்னதாக ஒப்பந்ததாரர்களுடன் நடத்தப்பட்ட கூட்டத்தில் (PreBid Meeting) தெரிவித்த கருத்துகளின் அடிப்படையில் சில திருத்தங்கள் மேற்கொண்டு 10.8.2023 வரை ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பிக்கும் காலம் நீட்டிக்கப்பட்டு, அந்தந்த மண்டலங்களில் முதுநிலை மண்டல மேலாளர் / மண்டல மேலாளர் தலைமையிலான ஐவர் குழுவால் ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு நிபந்தனைகளை நிறைவு செய்த ஒப்பந்தப்புள்ளிதாரர்களிடம் கட்டணக் குறைப்பிற்காகப் பல கட்டப் பேச்சுவார்த்தைகள் நடத்தி சந்தை நிலவரத்தையொட்டி, கட்டணக் குறைப்பு செய்து மாநில அளவிலான குழுவிற்கு அனுப்பப்பட்டது.

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைச் செயலாளர், இந்திய உணவுக் கழகச் செயல் இயக்குனர் மற்றும் பொது மேலாளர், இரு மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்கள், போக்குவரத்து மற்றும் நிதித்துறைகளின் துணைச் செயலாளர்கள் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மேலாண்மை இயக்குனர் உள்ளிட்டவர்களைக் கொண்ட மாநில அளவிலான குழு ஆய்ந்து ஒப்புதல் அளித்தபின் மண்டல அள



வில் போக்குவரத்து ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டு, 15.06.2024 முதல் மண்டல வாரியாகக் குறைந்த விலைப்புள்ளி அளித்த போக்குவரத்து நிறுவனங்களுக்குப் போக்குவரத்து செய்திட மண்டல அளவில் ஆணைகள் வழங்கப்பட்டன.

இதன்படி 2024-25 ஆம் ஆண்டில் நெல் உட்பட இதர பொருட்கள் 1.18 கோடி மெட்ரிக் டன்கள் போக்குவரத்து செய்ததில் ரூ.863.06 கோடி செலவானது. அதாவது ஒரு டன்னிற்கான போக்குவரத்துச் செலவினம் ரூ. 731.40 ஆகும்.

ஆனால் அ.தி.மு.க. ஆட்சியில் 2020-21-ஆம் ஆண்டில் நெல் உட்பட இதர பொருட்கள் 1.20 கோடி மெட்ரிக் டன்கள் அளவிற்குப் போக்குவரத்து செய்ததில் ரூ.1947.14 கோடி செலவாகியுள்ளது. அதாவது ஒரு டன்னுக்கான போக்குவரத்துச் செலவினம் ரூ.1622.24 ஆகும்.

2020-21-ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியுடன் ஒப்பிடுகையில் பரவலாக்கப்பட்ட போக்குவரத்து ஒப்பந்தப்புள்ளி முறையில் 2024 - 25 ஆம் ஆண்டில் டன் ஒன்றிற்கான செலவினம் ரூ.890.84 அளவிற்கு குறைந்துள்ளது. இதனால் ஓராண்டிற்கு மட்டும் ரூ.1084.08 கோடி ஒன்றிய மாநில அரசுகளுக்கு மீதமாகியுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனித்தனியாக ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்பட்டுப் போக்குவரத்து நடைபெற்று வரும் நிலையில் ஆங்கில நாளேட்டில் தெரிவிக்கப்பட்டது போன்று மாநில அளவிலான மையப்படுத்தப்பட்ட ஒப்பந்தப்புள்ளி முறையில் செயல்படவில்லை என்பதையும் தெளிவுபடுத்துகிறேன்.

தமிழ்நாடு மாநில லாரி உரிமையாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு நிர்வாகிகள் என் அலுவலகத்தில் கொடுத்த நெல் நகர்வு தொடர்பான மனுவினை உரிய அலுவலர்கள் விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்கவும் அறிவுறுத்தியுள்ளேன். அதே போன்று ஆங்கில நாளிதழில் வெளியான செய்தி குறித்தும் விசாரித்து அறிக்கை அளிக்கக் கோரியுள்ளேன்.

1.9.2025 முதல் 31.10.2025 வரை 12.01 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு மழை மற்றும் பண்டிகை காரணங்களால் ஏற்பட்ட தடங்கல்களையும் மீறி 10.75 இலட்சம் டன் நெல் பாதுகாப்பான இடங்களுக்கு நகர்வு செய்யப்பட்டது. இயற்கைச் சீற்றங்களை மீறி லாரிகள் மூலமாகவும் இரயில்கள் மூலமாகவும் நெல் நகர்வு நடைபெற்று வருகிறது. ஆகவே நெல் நகர்வில் தொய்வு என்பது சரியானதல்ல.

போக்குவரத்து ஒப்பந்த விதிகளில் தூரம் ஐந்து பிரிவுகளாகப் (Slab) பிரிக்கப்பட்டுள்ளது. அந்த நாளேட்டில் 5 பிரிவுகளில் 08 கிமீ வரை என்ற பிரிவை (Slab) மட்டும் எடுத்துக் கொண்டு செய்தி வெளி யிட்டுள்ளார்கள். மற்ற பிரிவுகளை (Slab)க் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் ஒரு பிரிவை மட்டும் எடுத்துக் கொண்டு ஒரு நேர்வை மட்டும் வைத்து அதன் உண்மைத் தன்மையை ஆராயாமல் கணக்கிட்டு, செய்தி வெளியிட்டுள்ளார்கள்.

அதேபோன்று மூன்று ஒப்பந்ததாரர்கள் 19 பேர்களுடன் இணைந்து பங்குதாரர்கள் (Partnership) ஆகத்தான் உள்ளனர் என்றும் அது துணை ஒப்பந்தம் (Sublet) அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான கழக அரசு எடுத்த நடவடிக்கையின் காரணமாக நெல் போக்குவரத்துக் கட்டணம் வெகுவாகக் குறைந்துள்ளது. விவசாயிகள் நலனில் பெரிதும் அக்கறை கொண்ட முதலமைச்சர் அவர்கள் இரண்டு முறை ஆய்வுக் கூட்டங்கள் நடத்தி நெல் கொள்முதல் மற்றும் நகர்வினைத் துரிதப்படுத்தியுள்ளார் கள்.

தெற்கு இரயில்வே திருச்சிராப்பள்ளி கோட்டத்தின் மூலம் 11க்கும் மேற்பட்ட வேகன்களில் 24.10.2025 அன்று ஒரே நாளில் மட்டும் 21,000 மெட்ரிக் டன் நெல் தமிழ்நாடு முழுதும் பாதுகாப்பாக இயக்கம் செய்யப்பட்டுள்ளது.

ஆதலால், நெல் கொள்முதலும் நகர்வும் துரிதமாக நடைபெற்று வருகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில், திண்டுக்கல் மாவட்டம், பழனி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கீரனூர் ஊராட்சியில், ரேஷன் கடையினை தொடங்கி வைத்து பொதுமக்களுக்கு வழங்கப்படும் ரேஷன் பொருட்களை பார்வையிட்டார். உடன், வட்டாட்சியர் பிரசன்னா, கீரனூர் பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி.கே.ரோஹினி அவர்கள் ஆகியோர் உட்பட அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.